வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 48/2021

வழக்கு சாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஜெயராமன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 32 |

தேதி 20.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் புத்தகரத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அ.சா.1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. கடந்த 08.09.2020 அன்று என் வீட்டிலிருந்த Haier LED TV 49 இன்ச் டீவி காணாமல் போய்விட்டது. அருகில் இருந்த புது வீட்டில் நாங்கள் படுத்திருந்தோம். காலை வந்து பார்த்த போது டீவியை காணவில்லை. அக்கம்பக்கத்தில் விசாரித்து பின்னர் இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். பின்னர் 22.09.2020 அன்று போலீசார் காவல் நிலையம் அழைத்து அங்கு சென்று பார்த்த போது ஒரு நபரை கைது செய்து வைத்திருந்தார்கள். அவர்தான் டீவியை திருடியதாக கூறினார்கள். டீவியை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3 நாட்கள் காலதாமதமாக தான் புகார் அளித்தோம் என்றால் ஆமாம். சந்தேகத்தின் பேரில் வேறு யார் மீதும் புகார் அளித்தோமா என்றால் இல்லை. போலீசார் கூறியதன் பேரில் தான் எதிரி தெரியும் என்றால் ஆமாம். நான் நேரடியாக எதிரியை பார்க்கவில்லை என்றால் ஆமாம். போலீசார் டீவியை கைப்பற்றியிருந்தால் நான் மனுசெய்து பெற்றிருப்பேன் என்றாலும் சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் நான் டீவியை பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**